பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்


சுடர் : 40
கதிர் : 190

வியாழக்கிழமை
05 ஜூன் 2025

வைகாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**மயிலிட்டி துறைமுகம் விரைவில் அபிவிருத்தி**

விரிவு பக்:-06



# பயங்கரமாக மாறுகிறது செம்மணிப் புதைகுழி

- சிசுவின் சிதிலமொன்று மீட்பு
- குவியல்களாக என்புகள்
- இணைந்த நிலையில் என்புக்கூடுகள்
- ஆடைகள் எவையும் மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி இந்துமயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் மனிதப்புதைகுழியில் ஒரு சிசுவின் என்புத்தொகுதி உட்பட இதுவரை 13 என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தப் புதைகுழி மிகப்பெரியதாக இருக்கலாம் என்ற அச்சம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 11

## செம்மணிப் புதைகுழி அகழ்வுக்கு கூடுதல் நிதியொதுக்கீடு தேவை!

### கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 5
செம்மணிப் புதைகுழியை மிகப்பெரிய மனிதப் புதைகுழியாகப் பிரகடனப்படுத்தவேண்டும். அத்துடன், அகழ்வுப்பணி உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு உரிய நிதி ஒதுக்கப்படவேண்டும் 11

# சர்வதேச கண்காணிப்புடன் செம்மணி அகழ்வுப்பணி!

### வலியுறுத்தி இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5
செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் சர்வதேச கண்காணிப்புடனும் சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தி இன்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. 11

## செம்மணிப் புதைகுழி விடயத்தில் விசாரணைகள் துரிதப்படுத்தப்படும்

### நீதியமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணை நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதியளித்துள்ளார்.
செம்மணிப் புதைகுழி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் 11

## 10 பவுண் நகைகள் வீடுடைத்துத் திருட்டு

### முள்ளியவளையில் சம்பவம்



முல்லைத்தீவு, ஜூன் 5
முல்லைத்தீவு முள்ளியவளை மாமூலைப் பகுதியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முள்ளியவளை பொலிஸாரிடம் முறைப்பாடு 11

### தரம் 5

## புலமைப்பரிசில் பரீட்சை உடனடியாக இரத்தாகாது

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
தரம்ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை உடனடியாக இரத்துச் செய்யும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. உரிய மீளாய்வுகள் செய்யப்பட்டே தீர்மானம் எடுக்கப்படும் என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில், 'கல்வி 11

## நீதியமைச்சர் ஹர்ஷனவை சிறைக்குள் தள்ளுவோம்!

### சாமர சம்பத் சூளுரை

கொழும்பு, ஜூன் 5
நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு என்றாவது ஒருநாள் சிறைச்சாலைக் காற்சட்டை அணிவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்று கையிலேயே 11

### முச்சந்தி முரளி

'ஸ்கொலர்ஷிப்பில கைவைச்சால் வாக்கு வங்கி கரைஞ்சிடுமெண்டு உவைக்கு இப்பதான் தெரிஞ்சிருக்கு போல'

## குருதிக்கறையுடன் சடலமொன்று மீட்பு!

### வவு. காத்தார்சின்னக்குளத்தில் அதிர்ச்சி

வவுனியா, ஜூன் 5
வவுனியா காத்தார்சின்னக்குளத்தில் குருதிக்கறைகளுடன் தூக்கிலிருந்து இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
செல்லத்துரை கபிநாத் (வயது -24) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இளைஞனின் உடலில் ஆங்காங்கே குருதிக்கறைகள் காணப்படுகின்றன.
எனவே, இந்த 11

## இலங்கைக் கடற்பாதுகாப்பில் அவுஸ்திரேலியா முழு ஈடுபாடு

### ட்ரோன்கள் பொருத்தப்பட்ட படகு அன்பளிப்பு

கொழும்பு, ஜூன் 5
இலங்கைக் கடற்பகுதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அவுஸ்திரேலியா அரசாங்கம் நவீன ட்ரோன்கள் பொருத்தப்பட்ட விசைப்படகு ஒன்றை வழங்கியுள்ளது.
அவுஸ்திரேலியாவின் துணைப் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4092 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 24 39 62 68 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1159 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 29 39 42 49 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0118 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 7 9 6 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2198 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 12 45 48 50 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5850 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 8 3 5 4 6 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1880 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 34 52 66 73 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 04.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0425 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 6 1 |

# மீனவர்மீது கடற்படை துப்பாக்கிச்சூடு; சுயாதீன விசாரணை நடத்தப்படும்!

## கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

**திருகோணமலை, ஜூன் 5**

**திருகோணமலை, குச்சவெளிக் கடற்பரப்பில் மீனவர்மீது கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து கூடியவிரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குறித்த பணிப்புரையை நேற்று விடுத்தார்.

திருகோணமலை, குச்சவெளிக் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் மீனவர் ஒருவர் காயமடைந்துள்ளார். சட்டவிரோத மீன்பிடி முறையானது கடலுக்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. சில மீனவர்களின் வருமானத்துக்காக பெரும்பாலானவர்களின் வருமானம் இழக்கப்படுகின்றது.

அதனால்தான் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைத் தடுக்குமாறு கடற்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை சம்பவம்கூட, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் ஏற்பட்டதெனக் கூறப்படுகின்றது. விசாரணைகளின் பின்னரே உண்மை என்னவென்பது தெரியவரும்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையும் தவறு. துப்பாக்கிச்சூடு நடத்துவதும் தவறு. அதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதும் தவறு. எனவே, அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-44,26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.06.2025 | புதன்கிழமை | 0558 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| T | 7 5 1 0 9 5 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.06.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2824 | M | 32 36 71 74 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| D | 03 21 43 69 | 4985 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 04.06.2025 | புதன்கிழமை | |
| இடபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 04 21 39 46 | 4536 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 04.06.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 04 | 05 15 41 74 | 2000 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 02.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 14 26 54 62 | 2650 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 02.06.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 31 33 60 62 | 2132 |

# பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 5

பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவத் தொழில் வல்லுநர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,

தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடலை அமைச்சர் தவிர்த்துவருகிறார்.

நிறைவுகாண் மருத்துவ சேவையின் பதவி உயர்வுகள் தொடர்பாக வாக்குறுதியளிக்கப்பட்ட தீர்வுகளை வழங்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி, கலந்துரையாடலின்றி வேலைநிறுத்தத்தைக் கைவிட நடவடிக்கை எடுக்கப்படாது - என்றார். (ச-இ)

# வெள்ளைவாகன கலாசாரம் மலையேறிவிட்டது

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

வெள்ளைவாகன கலாசாரம் இருந்த நாடு இது. அந்த யுகம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. நீதித்துறை சுயாதீனமாக இயங்கு கின்றது. தவறிழைப்பவர்கள் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்பமுடியாது என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று குற்றவியல் நடவடிக்கைமுறைச் (திருத்தச்)சட்டமூலம்மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியானது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசாங்கமாகும். எனினும், இது பொய் கூறும் அரசாங்கம் என்ற கருத்தை மக்கள் மயப்படுத்துவதற்கு எதிரணிகள் முயற்சிக்கின்றன. இதற்காகப் போலியான கருத்துகளை வெளியிட்டுவருகின்றன - என்றார். (ச-44)

# எதிர்க்கட்சி பலவீனமே அநுர ஆட்சிக்கு காரணம்!

## வீரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

எதிர்க்கட்சிகளின் பலவீனமே இந்த அரசு உதயமாவதற்குக் காரணம். அந்தப் பலவீனத்தை உள்ளூராட்சிசபைகளிலும் காட்டாமல் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முன்வரவேண்டும் என்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான வீரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் :

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அடிமட்டத்தில் இன்னும் சக்தியுடன் இருக்கிறது என்பது இந்தத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கும் வகையில் நூற்றுக்கு மேற்பட்ட சபைகள் உள்ளன. இதைச் செய்யவில்லை என்றால் அது எதிர்க்கட்சிகளின் பலவீனமே அன்றி வேறில்லை.

எதிர்க்கட்சிகள் எல்லாம் துண்டுதுண்டாக உடைந்ததால்தான் இன்று தேசிய மக்கள் சக்தி உருவாகி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. எதிர்க்கட்சிகளின் பலவீனமே இந்த ஆட்சி அமைவதற்குக் காரணம். இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்த சம்பவங்கள் அதிகமுள்ளன- என்றார். (ச-75)

# இடையூறு விளைவிப்பவர்களின் திட்டங்களைத் தோற்கடிப்போம்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

அரசாங்கத்தின் பயணத்துக்கு இடையூறு விளைவிப்பதற்கு குழுவொன்று முற்படுகின்றது. அந்தக் குழுவின் திட்டத்தை நிச்சயம் தோற்கடிப்போம் என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

151 உள்ளாட்சிசபைகளில் தேசிய மக்கள் சக்தி தூய்மையான ஆட்சியை அமைத்துள்ளது. ஏனைய சபைகளிலும் நிச்சயம் ஆட்சி அமைக்கப்படும். இன்று அதிகாரத்துக்காக கீரியும், பாம்பும் ஒன்றுசேர்ந்துள்ளன. எனினும், தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்ற 266 சபைகளிலும் இன்னும் ஒரு வார காலத்துக்குள் நிச்சயம் ஆட்சியமைப்போம். நாட்டில் சட்டம் உரியவகையில் செயற்படுகின்றது. எவரேனும் உதவ முற்பட்டால் காலைவாராமல் இருப்பதே பெரும் உதவியாக அமையும். நாம் ஆட்சியேற்கும்போது பல சவால்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றாகத் தீர்க்கப்பட்டுவருகின்றன.

மக்கள் எதிர்பார்க்கும் நிலைக்கு நாட்டைக் கொண்டுவருவோம். அனைத்து துஷ்ட சக்திகளும் ஒன்றிணைந்துள்ளன. அந்த சக்திகளை ஒன்றாகவே தோற்கடிப்போம் -என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போதையொழிப்பு 475 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 5
நாடளாவிய ரீதியில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருள்களுடன் 475 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 173 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 159 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 126 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 4 பேரும், கஞ்சாச் செடிகளுடன் 6 பேரும், போதை மாத்திரைகளுடன் 7 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடு செய்யாதீர்!

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் யாழ்ப்பாணத்தில் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 5

**தேசிய இடமாற்றக்கொள்கையை நடைமுறைப் படுத்தக்கோரி இலங்கை தாய் மொழி ஆசிரியர் சங்கத்தினரால் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக கவன வீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப் பட்டது.**

இதன்போது 'எங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்!' 'வெளிமாகாணம் என்ன வேறு நாடா!' 'ஆசிரியர் இடமாற்றம் மூலம் குடும்பத்தை சிதைக்காதே!' 'சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தில் ஆசிரியர்களின் அவர்களின் உறவினர்களின் மருத்துவ சான்றிதழைக் கருத்தில் கொள்!' 'இடமாற்றக் கடிதத்தில் காலத்தை வரையறை செய்!' ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் சார்பாக ஆறு பிரதிநிதிகள் ஆளுநரைச் சந்தித்து மனுவொன்றைக் கையளித்தனர். (ச-125,27)



## 300,000 கண்ணிவெடிகள் அகற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 5
3 இலட்சம் நிலக்கீழ் கண்ணிவெடிகளை அகற்றி தமது அடுத்தகட்டத்துக்கு நகர்ந்துள்ளது ஹலோ ரஸ்ட் நிறுவனம்.


ஹலோ ரஸ்ட் நிறுவனமானது 2002ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் மனிதாபிமான செயற்பாடான நிலக்கீழ் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை இலங்கையின் வடக்கு-கிழக்கு மட்டுமன்றி அனைத்து மாகாணங்களிலும் செய்துவருகின்றது.

இந்த நிறுவனம் நேற்றுமுன்தினம் வரை 3 இலட்சம் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது.

இதனையொட்டி ஹலோ ரஸ்ட் நிறுவனத்தின் ஊழியர்கள் நேற்று முகமாலையில் அமைந்துள்ள தமது அலுவலகத்தில் கேக் வெட்டிக்கொண்டாடினர். (ச-27)

## ஐ. ம. சக்தி உறுப்பினர்கள் வவுனியாவில் பதவியேற்பு





வவுனியா, ஜூன் 5
ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபைக்கு நியமன உறுப்பினர்கள் உட்பட 3 ஆசனங்கள் கிடைத்தன. அதில் இரு பெண்களும், ஓர் ஆண் உறுப்பினரும் அடங்குவர். குறித்த மூன்று உறுப்பினர்களுமே சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (ச-110)



## சர்வதேச உடற்கட்டழகன் இலங்கையருக்கு வெள்ளி

கொழும்பு, ஜூன் 5
இந்தியாவில் நடைபெற்ற ஷேருக்ளசிக் சர்வதேச உடற்கட்டழகன் போட்டியில் 90 கிலோகிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட இலங்கையின் எச்.ஏ. சரத் சம்பத் வெள்ளிப்பதக்கம் வென்று பாராட்டைப் .பெற்றார்.

இந்த சர்வதேச உடற்கட்டழகன் போட்டியில் பல்வேறு நாடுகளிலிருந்து 150க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர். (ச-இ)

## கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 5
தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க்கொடுப்பனவு பெறுவோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளை ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச- 25,9)

## வன்னியில் 11 பாடசாலைகளில் மீள்கட்டுமானப்பணி விரைவில்

காதர் மஸ்தான் எம்.பி. தகவல்

வவுனியா, ஜூன் 5
வன்னி மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த 11 பாடசாலைகளின் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளதாக இலங்கை தொழிலாளர் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நேற்று தெரிவித்துள்ளார்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்ற கல்வி அமைச்சு தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக்குழுக்கூட்டத்தின்போதே குறித்த அனுமதிவழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
மீள்குடியேற்றச் செயலணி ஊடாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த வன்னி மாவட்டத்தில் உள்ள 11 பாடசாலைகளின் மீள்நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் நான் கோரிக்கையை முன்வைத்திருந்தேன்.

எனது கோரிக்கையை ஏற்று அதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்துதருவதாக உறுதியளித்துள்ளார் - என்றார். (ச-18)



## கொழும்பு மாநகரசபை ஆரம்பக்கூட்டம் ஜூன் 16

கொழும்பு, ஜூன் 5
கடந்த மே 6 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கொழும்பு மாநகரசபையின் ஆரம்பக் கூட்டம் ஜூன் 16 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபை ஆணையர் சாரங்கிகா கல்ஹாரி ஜயசுந்தர வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையில் எந்தக் கட்சிக்கும் முழுமையான பெரும்பான்மை கிடைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டும் மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கு பிற அரசியல் குழுக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன என்று அறிவித்துள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புகரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச்செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.

# 60 போதைமாத்திரைகளுடன் உடுவிலில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 5

உடுவில் பகுதியில் 60 போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் தெற்குப் பகுதியில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருப்பதாக யாழ். மாவட்ட விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக 26 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல்செய்து நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)



# திருவள்ளுவர் சிலை ஓமந்தையில் திறப்பு

வவுனியா, ஜூன் 5

வவுனியா ஓமந்தை கிராம அலுவலர் வளாகத்துக்குள் திருவள்ளுவர் சிலை நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

கூமாங்குளம் கிராம அலுவலர் நாகராஜா ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட வவுனியாப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் சிலையைத் திறந்துவைத்தார்.

அன்னம்மா அறக்கட்டளையின் 10 ஆவது ஆண்டை முன்னிட்டு அதன் ஸ்தாபகர் அருட்பணி சிற்றம்பலம் கமலகண்ணனால் குறித்த சிலை நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் கு.பாலஷண்குகன், தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் சு.தெர்ஜனா, ஓமந்தை மத்தியகல்லூரி அதிபர் செ.பவேந்திரன், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)


# சிவசிதம்பரம் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர்த் தொகுதிகளின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் 23 ஆவது நினைவுதின நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் இளையதம்பி இராகவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமராட்சி கரவெட்டி நெல்லியடிச் சந்தியில் உள்ள அவரின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் அரசியல்வாதிகள், கல்விமான்கள், சமூகப் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-இ)





# மீள்குடியேறிய மக்களுக்கு காங்கேசனில் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

32 ஆண்டுகளின் பின்னர் காங்கேசன்துறையில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சீரான குடிதண்ணீர் வசதி காணப்படாத நிலையில் காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினரால் குடிதண்ணீர்த்தாங்கி அமைத்து நீர்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நீர்த்தாங்கி மூலமாக கடந்த 25ஆம் திகதி அப்பகுதி மக்கள் குடிதண்ணீர்ப் பாவனையை நிவர்த்தி செய்து வருகின்றனர். (ச-100)

# யோகா கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வட மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ளநல்லூர்மங்கையற்கரசிவித்தியாலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளமுடியும். சுமார் 3 மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்துகொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## வார்த்தைகள் வேண்டாம் செயற்பாடுகளே தேவை!

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஊழல்வாதிகள் அனைவரும் கைதாவார்கள். வெளிநாடுகளில் உள்ள மோசடியாளர்களைக் கைதுசெய்வதற்கு அந்தந்த நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்படும் என்று அறிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ. ஊழல் மோசடியாளர்கள் கைதுசெய்யப்படுவார்கள், வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள இலங்கையின் கறுப்புப்பணம் உடனடியாக மீட்டெடுக்கப்படும் என்ற வாக்குறுதிகளை வழங்கியே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர். ஆதலால், கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன விடயத்தைத்தான் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் வைத்து மீண்டும் ஒருதடவை வெளிப்படுத்தியுள்ளார். இதில் ஆச்சரியப்படுவதற்கும், புருவங்களை உயர்த்துவதற்கும் எதுவுமில்லை.

ஊழலுக்கு எதிரான கருத்துகளையும், நிலைப்பாடுகளையும் தனது கொள்கையாக அறிவித்துக்கொண்டு ஆட்சிக்குவந்த ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம், இதுவரை தனது வாக்குறுதிகள் எவற்றையும் காப்பாற்றியதில்லை. அரசாங்கத்தின் இந்தத் தாமதத்தாலும், கையாலாகாத தனத்தாலும், 'தேசிய மக்கள் சக்தியினர் பொய்களைக்கூறியே ஆட்சிக்கு வந்தனர்' என்ற தோற்றப்பாடு பொதுஜன பெரமுன உள்ளிட்ட எதிர்க்கட்சிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதை சிலர் நம்பவும் தலைப்பட்டுள்ளனர். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிட்டத்தட்ட 23 இலட்சம் வாக்குகளை அரசாங்கம் இழந்தமைக்கு, அநுர அரசாங்கத்தின் செயற்படாத தன்மையே காரணம். எனவே, 'இனியும் ஊழல்வாதிகளைக் கைதுசெய்வோம்', 'கறுப்புப்பணத்தை மீட்டெடுப்போம்' என்ற பழைய புராணத்தை அரசாங்கம் பாடிக்கொண்டிராமல், மக்களின் எண்ணப்படியும், ஆணைப்படியும் செயற்படுவதற்கு முனையவேண்டும்.

70 ஆண்டுகாலமாக இந்த நாட்டில் புரையோடிப் போயிருந்த எழுதப்படாத பல விதிகளைத் தகர்த்தே தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தனர். தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் ஆட்சிக்குக் கொண்டுவந்தது சாதாரண ஒரு நிகழ்வல்ல. இதுவொரு வரலாற்றுத் திருப்பம். எனவே, மக்களிடம் மேலான எதிர்பார்ப்பு மிகையாகவுள்ளது. ஆதலால், அந்த எதிர்பார்ப்புக்கு எப்போதெல்லாம் குந்தகம் ஏற்படுகின்றதோ அப்போதெல்லாம் தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் வெறுக்கவே செய்வார்கள். ஏனெனில் அதிகளவான எதிர்பார்ப்பே அதிகளவான விரக்தியையும் ஏற்படுத்தும். கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் இதுவே எதிரொலித்தது. எனவே, அதற்கேற்ற புரிதலை தேசிய மக்கள் சக்தியினர் தமக்குள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஊழல்வாதிகளை பாரபட்சம் இல்லாமல் தண்டிப்போம், கறுப்புப்பணத்தைக் கொண்டுவருவோம், பதுக்கப்பட்ட தங்கத்தைப் பத்திரமாக மீட்போம் என்றெல்லாம் வார்த்தைகளில் ஜாலம் காட்டிக்கொண்டிராமல், செயற்பாட்டு அரசியலை முன்னெடுக்க அவர்கள் முன்வரவேண்டும். இல்லையேல் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மேலும் பெரியதொரு வீழ்ச்சியை அவர்கள் எதிர்கொள்வார்கள்.


### நாளொரு நல்வார்த்தை

அச்சத்தைப்போல வாழ்க்கையில் மிகவும் மோசமான மற்றும் மிகவும் அபாயகரமான விடயம் ஒன்றுமில்லை.

– ஜவஹர்லால் நேரு –




## பலஸ்தீனத்துக்கு தொடர்ந்து இலங்கை ஆதரவளிக்கும்!



### அந்தநாட்டுத் தூதுவரிடம் அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

கொழும்பு, ஜூன் 5

பலஸ்தீனப் பிரச்சினைக்கு பலஸ்தீனம் - இஸ்ரேல் அங்கீகரிக்கப்பட்ட இரு நாடுகள் உடன்படிக்கைமூலம் தீர்வுகாண்பதற்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவரிடம் உறுதியளித்துள்ளார். 1967ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட எல்லைகளின் பிரகாரம் தீர்வு காணப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பலஸ்தீனத் தூதுவருக்கும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை அரசாங்கம் காசா நிவாரண நிதியாக ஒரு மில்லியன் டொலர் வழங்கியமைக்காக இலங்கை அரசாங்கத்துக்குப் பலஸ்தீனத் தூதுவர் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (எ-6)

## மின்சாரசபை தலைவராக உதயங்க ஹேமபால

கொழும்பு, ஜூன் 5

இலங்கை மின்சாரசபையின் தலைவராக, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பதவியிலிருந்து திலக் சியம்பலாபிட்டிய பதவிவிலகியதைத் தொடர்ந்து, உதயங்க ஹேமபால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## மாணவர்கள் உள்ளீர்ப்பில் முறைகேடெனில் அறிவிக்கவும்



கொழும்பு, ஜூன் 5

சுற்றறிக்கைகளுக்கு மாறாக பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் அரசியல் தலையீடு தற்போது முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

முறைகேடுகள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் கல்வி அமைச்சின் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடளிக்குமாறு பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-இ)

## பல்கலைக்கழக அனுமதிக்கு 90,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 5

அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், இந்த ஆண்டு பல்கலைக்கழகச் சேர்க்கைக்காக சுமார் 90ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்லைனில் பதிவு செய்துள்ளனர் என இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பதிவுக் காலம் மே 30 ஆம் திகதியுடன் அதிகாரபூர்வமாக முடிந்துள்ளது. ஏற்கெனவே பதிவு செய்த மாணவர்கள் ஜூன் 13ஆம் திகதி வரை தங்கள் விருப்ப வரிசையை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)


## ஹைஏஸ் திருட்டு; சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூன் 5

ஹைஏஸ் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபரை தெரணியகலப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். ஹைஏஸ் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைவாக ஹைஏஸைக் கைப்பற்றியதுடன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த மண் எங்களின் சொந்தமண்

## யாழ்.பல்கலையில் போராட்டம்!

**யாழ்ப்பாணம், ஜூன் 5**

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் கைதுசெய்யப்பட்ட தமிழ் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும் தொல்லியில் ரீதியான ஆக்கிரமிப்புகளை உடன் நிறுத்த வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றுப் புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்க முன்னாள் தலைவர் த.சிவரூபன், கிராமிய ஊழியர் சங்கத் தலைவர் என்.இன்பம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'கட்டமைக்கப்பட்ட பண்பாட்டு இனப்படுகொலையை நிறுத்து', 'திட்டமிடப்பட்ட தொல்லியல் ஆக்கிரமிப்புகளை உடன் நிறுத்து', 'இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு தாய்நிலத்தை ஆக்கிரமிக்காதே', 'இந்த மண் எங்களின் சொந்தமண்!', 'வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம்' உள்ளிட்ட பல்வேறு பதாகைகளைத் தமது கைகளில் ஏந்தியும், பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-125,66,20)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பூநகரி நாச்சிக்குடா கடற்கரையைச் சுத்தம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-33-

# மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் விரைவில் அபிவிருத்தி நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியின் மூன்றாம் கட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் ஊடாக வடமாகாணத்திலுள்ள மீனவ சமூகம், கிழக்கு மற்றும் தென் மாகாணத்திலிருந்து வரும் மீன்பிடிப் படகுகளுக்கான நீர், மின்சாரம், எரிபொருள் போன்ற அத்தியாவசிய வசதிகள், மீனவர்களுக்குத் தேவையான வலை தயாரிக்கும் வசதிகள், ஏல விற்பனை மண்டப வசதிகள் மற்றும் வான்வழிச் செய்திப் பரிமாற்ற வசதிகள் போன்றவற்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



திட்டமிடப்பட்டுள்ள தரையில் மேற்கொள்ளப்படவேண்டிய கட்டுமானங்களை மேற்கொள்வதற்கும், கருத்திட்டக் காலப்பகுதியை 2027 வரைக்கும் நீடிப்பதற்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

## நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜூன் 5

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

காலங்கடந்த பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள் மற்றும் முதியோர் அடையாள அட்டை போன்ற ஆவணங்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# ஆனையிறவு உப்பளத்தில் ஊழியர் போராட்டம் முடிவு

## *ஹந்துன்நெத்தி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 5

ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலையின் ஒரு சில சேவையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதிநிதிகளின் வலியுறுத்தலுக்கு அமைய ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை 'ஆனையிறவு உப்பு' என்று பெயரிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு தரப்பினர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஒரு தரப்பினரைத் தவறாக வழிநடத்தியுள்ளார்கள். உப்பளத்தில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகத் தொழிலாளர்களுடன் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் ஒரு சில சேவையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தால் உப்பு உற்பத்திக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தொழிலாளர்களின் நலன்புரித் திட்டங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



# ஒளியிழந்தோரின் இன்னிசை கிளிநொச்சியில் கோலாகலம்!

கிளிநொச்சி, ஜூன் 5

வடக்கு - கிழக்கு வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வும் இன்னிசை நிகழ்வும் கிளிநொச்சி விவேகானந்தர் நகரிலுள்ள விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

போரில் பார்வையிழந்த மாற்றுத்திறனாளிகளை மகிழ்வித்தல் மற்றும் அவர்களின் வாழ்வியலை வடக்கு - கிழக்கு வாழ் மக்களுடன் இணைத்தல் மற்றும் பார்வையிழந்த மாற்றுத்திறனாளிகளின் இசைத்திறமையை வெளிக்கொணரும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.



நிகழ்வுகளின் ஒரு பகுதியாக விழிப்புலனற்ற மாற்றுத்திறனாளி முல்லை சி.சுடர் இசையமைத்து வெளியிட்ட 'கலையுலா' இசைத்தட்டு உதயன் குழுமத் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் விழிப்புலனற்றோர் சங்கத்தினர், எழுத்தாளர் தீபச்செல்வன், பாடகர்கள், மூத்த போராளி பஷிர் காக்கா, பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 மத்தியூஸ் வீதி, ஆதன இல 7/6, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் என்.ரவியும் பெண் ஜான்சிராணியும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யோசப் ஜான்சிராணி (முன்னர் ரவி ஜான்சிராணி) 08.08.2018 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யூல் பிலைனன் அன்ரன் றஞ்சித் முகதாவில் வரையப்பட்ட 66ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு குளி 11 இனை கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவருக்கு நன்கொடையளிக்கப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டுக்குளி இறை. "குளத்து வயலும் மறுபிரிவுகளும்" கிராமசேவையாளர் பிரிவு J/75 சுண்டுக்குளி தெற்கு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஜே.எச்.ஆர் பேரின்பநாயம் 10.02.1972 திகதியில் அளந்து பிரிவிட்டு வரைந்த 1092 ம் இலக்கப்படத்தில் "1" எனும் எண்ணால் சுட்டப்பட்ட பாகம் குளி (11) பதினொன்று கல் வீடும் வடமேற்கு எல்லைச் சுவர்களும் பயிர் வகைகளும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதன் எல்லைகள்:-

கிழக்கு: குறித்த படத்தில் "2" எனும் எண்ணால் சுட்டப்பட செபஸ்ரியாம்பிள்ளை பெண் திரேசம்மாவுக்குரிய ஆதனம்.
வடக்கு: யோசேப்பு பாலசிங்கத்துக்கு உரிய ஆதனம்.
மேற்கு: றோட்டு.
தெற்கு: மனுவல் யோசேப்புக்குரிய ஆதனம்.
இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது கனகேஸ்வரன் கைம்பெண் மேரிஆன் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

## வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### பதவி வெற்றிடம் வெளிவாரி நியமனம்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து **வெளிவாரியாக** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆண், பெண் இருபாலரும்)

01. பதவி / சம்பளஅளவுத்திட்டம் : எழுதுனர் 302/12
(சுற்றுநிருபம் 02/2025 இன் படி) 33,820-370X10-385X10 - 41,370.00
வெற்றிடம் - 02
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

02. **தகமைகள்** (சுற்றுநிருபம் - 01/2021)

I. கூட்டுறவுப் ஊழியர் 13 வது சம்பளத்திட்ட பதவியில் எழுதுனர் / கணக்காய்வு எழுதுனர் / காசாளர் / கணனிப்பக்க உருவாக்குனர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவுப் ஊழியர் 14 வது சம்பளத்திட்ட பதவியில் கணக்குப்பதிவாளர் எழுதுனர்/ காசாளர் / கணனிப்பக்க உருவாக்குனர் / பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் / பயிற்சி நிறுவனமொன்றில் கணக்கியல் / கணக்குப்பதிவியல் தொடர்பான பயிற்சி நெறிக்கான சான்றிதழ்.

அல்லது

III. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

IV. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி/க.பொ.த சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

03. வயதெல்லை : 18-45 ற்கு உட்பட்டிருத்தல்
04. விண்ணப்ப முடிவு திகதி : 24.06.2025
05. குறிப்பு

- கூட்டுறவு சங்கங்களின் நிரந்தரபணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்
(கூட்டுறவு பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல)
- விண்ணப்பிக்கும் பதவி, முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தற்போதைய வசிப்பிட முகவரி, அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, வயது, பால், கல்வித் தகமை, தொழிற் கல்வித்தகமை, சேவைத்தகமை, ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை தாங்களே தயாரித்து, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "எழுதுனர் 302/12 பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிட்டு "தலைவர், வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.44, குட்செட் வீதி, வவுனியா" என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் வேண்டும்.பதிவு தபாலில் அனுப்பப்படும் பதிவு தபால் மூலம் அனுப்புதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு.சு.புவனேந்திரராசா, JP**
**தலைவர்**
**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்**
**இல.44, குட்செட் வீதி வவுனியா**
**024 222 2636 024 222 2341**

**திகதி**
**05.06.2025**

# முஸ்லிம் வட்டாரத்துக்கு முன்னணி ஆசன ஒதுக்கீடு

## முஸ்லிம்கள் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மாநகரசபையில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தனக்குக் கிடைத்த போனஸ் ஆசனத்தை 13ஆவது வட்டாரத்துக்காக ஒதுக்கியமைக்காக முஸ்லிம் சமுகத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 13ஆம் வட்டாரத்தில் நேரடி வேட்பாளராக ஹம்சா சினாஸ் களமிறங்கியிருந்தார். அந்தத் தொகுதியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி கிடைக்கவில்லை. எனினும், கிடைத்த ஒரேயொரு போனஸ் ஆசனத்தை முஸ்லிம் மக்களின் நன்மை கருதி திருமதி சுதர்மன் ஜெயாமினிக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி வழங்கியுள்ளது. எனவே, 13ஆவது வட்டாரத்துக்காக போனஸ் ஆசனத்தை ஒதுக்கியமைக்காகவே, முஸ்லிம் மக்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ம-இ)

# வற்றாப்பளை அம்மனுக்கு ஜூன் 9 இல் பொங்கல்

## முன்னாயத்தப்பணிகள் ஆரம்பம்


முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அதற்கான முன்னேற்பாடுகளாக, வற்றாப்பளைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் களால் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி உணவகம் (ஹோட்டல்) சர்பத் கடை தவிர்ந்த ஏனைய உணவு கையாளும் நிலையங்கள் (ஐஸ்கிறீம் கடை, ஐஸ்கிறீம் வாகனம், பூந்தி இனிப்பு வகைகள் மற்றும் மிக்சர் கடைகள்) தத்தமது பிரதேச உள்ளூராட்சிசபைகளின் அனுமதியைப் பெற்றிருத்தல்வேண்டும். ஐஸ்கிறீம், உணவு, தேநீர், பூந்தி இனிப்பு, மிக்சர், சர்பத் போன்றவற்றை வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல்வேண்டும்.

உணவகத்திற்கும், சர்பத் கடைகளுக்குமான உரிமையாளர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வற்றாப்பளைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் உற்சவகால அலுவலகத்தில் இடம் பெறும் கலந்துரையாடலில் கட்டாயம் பங்கு பற்றுதல்வேண்டும் காவடி உரிமையாளர்கள் மறுநாள் 8ஆம் திகதிக்கு முன்னர் பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்து அவரின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். சிகரெட், புகையிலை, மதுபானம் ஆகியன ஆலய வளாகத்தினுள்ளே வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அந்தியேட்டி-ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



மண்ணில் 21 . 04 . 1948
விண்ணில் 07 . 05 . 2025

கடந்த (07.05.2025) அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்

### வைத்திலிங்கம் சிவபாலன்

அவர்கள் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், வயாவிளான் தெற்கு காலம்சென்றவர்களான மயில்வாகனம் சாவித்திரி தம்பதிகளின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் தர்மபாலச்சந்திரன் மற்றும் ஜெயபாலன், ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் மைத்துணரும், செந்தில்வாசன், செந்தில்குமரன், செந்தில்ராஜன் மற்றும் காலஞ்சென்ற செந்தில்கரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுமங்கலா, கார்த்திகா ஆகியோரின் மாமனாரும், டிருஜன், லினீஷா, ஜெனீசன், பவிஷா ஆகியோரின் அன்பு தாத்தாவும், விஜிதா, தபோஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரிகைகள் நாளை வெள்ளிக்கிழமை (06.06.2025) அதிகாலை 4.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வு முற்பகல் 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை அன்று (06.06.2025) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறும், தொடர்ந்து நடைபெறும் [illegible] நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

[illegible], கொல்லங்கலட்டி
**இங்ஙனம் குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
10
05
1950



விண்ணில்
03
06
2025

## தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்)

துன்னாலை வடக்கு வெல்லிக்கம் தோட்டத்தினை பிறப்பிடமாகவும், வைகுண்டம் துன்னாலை வடக்கினை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (03.06.2025) செவ்வாய்க்கிழமை மாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் துன்னாலை வடக்கினை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான விஜயசுந்தரம் - புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், செந்தூரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஐங்கரன் (பொறியியலாளர், RDA), சசீதரன் (கணக்காளர், கனடா), அரவிந்தன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி (நியூசிலாந்து), செல்வானந்தன் (ஓய்வுநிலை பொலிஸ் அதிகாரி), காலஞ்சென்ற உதயகுமார் (பொலிஸ் பரிசோதகர்), சிவகுமார், காலஞ்சென்ற சுவேந்திரராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அக்ஷயா, ஐஸ்வந்த், பிரகன்யா, அதன்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் தாமரைக்குளத்தடி, சாவகச்சேரி வீதி துன்பாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"வைகுண்டம்"
துன்னாலை வடக்கு.

தகவல் : குடும்பத்தினர்
077 394 6526, 077 539 0713

(CS/58468) J-1

# 4,60 000 ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். வண்ணார்பண்ணை வண்ணை கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய மாம்பழத் திருவிழாவில் முருக னுக்குப் படைக்கப்பட்ட மாம்பழம் 4 இலட் சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்திருந்த அ. அகிலன் எனும் அடியவர் இந்த மாம் பழத்தை ஏலத்தில் எடுத்திருந்தார்.

இதன் போது ஆலய நிர்வாகசபையி னரால் ஏனைய சில பொருள்களும் ஏலத்தில் விடப்பட் டிருந்த நிலையில் அவற்றையும் அடி யவர்கள் ஏலத்தில் வாங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஆலயத் தின் 15 நாள் திரு விழாவின் தொட ராக 8ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை தேர்த் திரு விழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 10ஆம் திகதி செவ் வாய்க்கிழமை பூங்காவனத் திரு விழாவும் 11 ஆம் திகதி புதன்கிழமை வைரவர் உற்சவ மும் இடம்பெற்று திருவிழா நிறைவ டையும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ச-25, 125)

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31
07
1974



மறைவு
20
05
2013

அமரர்

## மதியாபரணம் மதிவதனன்

(கரைத்துறைப்பற்று பிரதேசசபை)

தாயைத்தொடும் பூங்காற்றாய்,

அப்பா எனும் என் வெற்றிக்கேதிர் வட்டமாய்

அழுக்காறும் அச்சமும் நீங்க வைத்தாய்,

அன்பின் அரண் நீயே அப்பா!

மனைவி, மகள்,
அக்கா, அத்தான், மருமக்கள்மார்.

(CS/58485) J-1

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செட்டிய குறிச்சி பூநகரியை பிறப்பிடமாகவும் முழங்காவில் கிருஷ்ணா நகரை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி அன்னலட்சுமி மார்க்கண்டு

அவர்களின் இரண்டாம் ஆண்டு
நினைவஞ்சலி

காலம் என்னும் கொடியவன்
உம்மை பறித்துச் சென்றாலும்
எம் இதயச் சுவரில் உந்தன் பிம்பம்
என்றும் அழியாத ஓவியமாய்
எங்கிருந்தாலும் உம் ஆசி வேண்டும்
என்றும் உந்தன் நினைவுகளுடன் வாழ்வோம்.

தோற்றம்
15.04.1948

மறைவு
16.05.2023

கிருஸ்ணா நகர்,
முழங்காவில்.


என்றும் நினைவில்
குடும்பத்தினர்

(CS/58400) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு போஷாக்கு அனைவருக்கும் சௌபாக்கியம்


நாடு முழுவதும் ஒவ்வொரு ஊராகச் சென்று
எமது 17,000 பாற்பண்ணையாளர்களது உழைப்புக்கு
இடைத்தரகர்கள் இன்றி உரிய பெறுமதியைப் பெற்றுக்கொடுத்து
நாட்டுக்கு போஷாக்கும் அனைவருக்கும் சௌபாக்கியத்தையும் தந்திடும் கொத்மலே.



Kotmale

நம் நாட்டின் போஷாக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# டெங்கு 23,000 சிக்கன்குனியா 500

## ஜூன், ஜூலையில் மேலும் உயரும் தொற்றுநோய்ப் பிரிவு தகவல்

**கொழும்பு, ஜூன் 5**

**நாடளாவியரீதியில் இதுவரை 23 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்களும் 500 சிக்கன்குனியா நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோய்ப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் அனுஜா வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பல பகுதிகளிலும் டெங்கு மற்றும் சிக்கன்குனியா பரவல் தீவிரமடைந்துள்ளது. இதுவரை நாடளாவிய ரீதியில் 23,300 க்கும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 45 சதவீதமான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாநகரசபை மற்றும் கம்பஹா மாவட்டத்தில் அதிக நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வாரம் மாத்திரம் ஆயிரத்து 678 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

நாட்டில் இதுவரை 500க்கும் மேற்பட்ட சிக்கன்குனியா தொற்றாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பருவப் பெயர்ச்சியைத் தொடர்ந்து ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் இந்நிலை மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது. இந்நிலையில் தொடர்ச்சியாக நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இம்மாதமும் டெங்கு ஒழிப்பு வாரத்தை பிரகடனப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

(ச-இ)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
தொடர்புகளுக்கு:
**077 334 1281**

**நாகபூஷணி திருமண சேவை**
**இடமாற்றம்**
**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**
**(துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில்)**
**மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.**
**077 138 7596 , 071 999 9306**
(CS/3325) (B) D*

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
**திரு க.செந்தூரன்** அவர்களின்
அன்புத் தந்தையாகிய
**அமரர் தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 17 - 03 - 1958



மறைவு 07 - 05 - 2025

**எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடந்த 07-05-2025 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி**

**அமரர் இராசேந்திரம் குசலகுமாரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 04.06.2025 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அளவெட்டி கிழக்கு,**
**அலுக்கை, அளவெட்டி.**
**குடும்பத்தினர்**



## கௌரவிப்பு விழா!

யாழ்ப்பாணம் , ஜூன் 5

பொன்னாலை அன்னதான பிரபு ஸ்ரீ சபரி ஐயப்பன் ஆலய குரு சுவாமி சைவத்திரு ப.தனீஸ்வர சுவாமிக்கு "ஞானச்சுடர்" பட்டம் வழங்கியதையிட்டு கௌரவிப்பு விழா இ.சுபாஸ்கரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொன்னாலையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக மறவன்புலவு சச்சிதானந்தம் , கிராம சேவகர் சிவரூபன், சமூகமட்ட அமைப்பினர், முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-22.27)

# இந்திய ஒப்பந்தத்தினூடாக இலங்கை தாரைவார்ப்பு!

## மதுர விதானகே சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 5

இந்தியாவும் இலங்கையும் செய்துள்ள இரகசிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஊடாக இலங்கையை இந்தியா கைப்பற்றியுள்ளது என்று ஜனநாயகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. அது இரகசிய ஒப்பந்தம். பாதூரமான ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை நாடே இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தப் பிராந்தியத்தின் கடற்பரப்பில் ஏனைய நாடுகளின் செயற்பாடுகளுக்கு அனுமதிவழங்க முடியாது. இது மிகவும் ஆபத்தான விடயம். இலங்கைக் கடற்பரப்பு பொருளாதார முக்கியத்தும் வாய்ந்த இடம். ஒரு வருடத்துக்கு 40 ஆயிரம் கப்பல்கள் பயணிக்கின்றன.

இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினால் இந்தக் கப்பல்கள் செல்லமுடியாது. இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். - என்றார். (ச-75)

# கைதான அமைச்சர்கள் கல் உடைக்கமாட்டார்கள்!

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகிய இருவருக்கும் கல் உடைக்கும் தண்டனை வழங்கப்படமாட்டாது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த இருவருக்கும் எவ்வாறான தண்டனை சிறைக்குள் வழங்கப்படும் என்று அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார். முதலில் அவர்களின் ஆரோக்கிய நிலைமை பரிசோதித்துப் பார்க்கப்படும். அதற்கு ஏற்பவே வேலை வழங்கப்படும். நோய் இருந்தால் சிகிச்சை வழங்கப்படும். தூசு ஒத்துக்கொள்ளாதவர்களை நாம் தூசு தட்டுவதற்கு, துப்புரவு செய்வதற்கு நிறுத்தமாட்டோம். கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டதும் நாம் எமது தொழிற்சாலையில் அவர்களை அமர்த்துவோம். ஆடை சலவை மற்றும் மர ஆலை போன்ற தொழிலில் ஈடுபடுத்துவோம் - என்றார்.

(ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரின் வெற்றிக் கொண்டாட்டம் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் சாவு!

## 60 இற்கும் மேற்பட்டோர் காயம்; அவர்களில் பலர் கவலைக்கிடம்

ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிய நிலையில், நேற்று இடம்பெற்ற வெற்றிப் பேரணியின்போது கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர். பெங்களூரின் விதான் சவுதாவில் இருந்து சின்ன சாமி கிரிக்கெட் மைதானத்துக்கு திறந்தவெளி பேருந்தில் பெங்களூர் அணி நேற்று உலாவந்த போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கியே 11 பேர் உயிரிழந்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையில், அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



### சர்வதேச...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில், செம்மணி வரவேற்பு வளைவுக்கு அருகாக இன்று காலை 10 மணியளவில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இது தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கலாரஞ்சினி தெரிவித்ததாவது:-
தமிழர் தாயகத்தில் காலத்துக்குக் காலம் பல்வேறு மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
ஆனால், அவற்றுக்கான நீதி நிலைநாட்டப்பட்டுவிட்டதா? என்று கேட்டால் அதற்கு 'இல்லை' என்பதுதான் பதிலாகவுள்ளது.
எனவே, இதுவரை அவதானிக்கப்பட்ட புதைகுழிகளுக்கு நீதிகோரியும், செம்மணிப் புதைகுழியில் சர்வதேச கண்காணிப்பைக் கோரியும், காணாமலாக்கப்பட்டோருக்கான சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்களை அகழ்வுப் பணிகளை பார்வையிட அனுமதிக்குமாறு வலியுறுத்தியும் செம்மணி வளைவுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றார்.
இந்தப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ-ச-125-113-66-26)

### 10 பவுண்...

வழங்கப்பட்டுள்ளது. வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-19)

### புலமைப்பரிசில்...

மறுசீரமைப்பின் கீழ் பரீட்சை முறைமை இரத்துச் செய்யப்படுமானால், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் இரத்துச் செய்யப்படுமா?, அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டால், எந்த அடிப்படையில் தரம் 6 இற்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள்? - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன கேள்வி எழுப்பியிருந்தார்.
அந்தக் கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே, புலமைப்பரிசில் பரீட்சையை உடனடியாக நீக்குவதற்குரிய ஏற்பாடு இல்லை. ஏனைய மறுசீரமைப்புகள் மூலம் கிடைக்கப்பெறும் பெறுபேறு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராய்ந்த பின்னரே தீர்மானமொன்றுக்கு வரமுடியும். எனினும், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் உள்ள அழுத்தங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குரிய திட்டமும் செயற்படுத்தப்படும் - என்றார். (அ-ம-44)

### குருதிக்...

இறப்புத் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
சடலமாக மீட்கப்பட்ட இளைஞர், நேற்று முன்தினம் மாலை இளைஞர் குழுவொன்றுடன் மோதலில் ஈடுபட்டார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். சந்தேகத்தின் அடிப்படையில் இளைஞர்கள் சிலர் பொலிஸாரின் விசாரணை வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-110-28)

### இலங்கைக்...

ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்த அவர், இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்பில் வலியுறுத்தியிருந்தார்.
இதன் தொடர்ச்சியாகவே, நீண்டதூரம் பறக்கக்கூடிய நவீன கண்காணிப்பு ட்ரோன்கள் பொருத்தப்பட்ட விசைப்படகை அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத வர்த்தகங்கள், போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான உதவியாகவே இந்த ட்ரோன்கள் பொருத்தப்பட்ட விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது.
இந்த விசைப்படகும், ட்ரோன்களும் 12 மில்லியன் ரூபா பெறுமதியானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

### நீதியமைச்சர்...

அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீதி அமைச்சர், நீதிமன்றத்தை மதிக்க வேண்டும். கருத்துகளை வெளியிடும் போது பொறுப்புடன் செயற்படவேண்டும். தேசிய மக்கள் சக்தியால்தான் மஹிந்தானந்த சிறைக்குள் சென்றார் என அவர் கூறியுள்ளார். இது தொடர்பான வீடியோ தொலைக்காட்சியில் வெளியானது. நீதிபதிகள் மூவர்தான் தீர்ப்பை வழங்கியிருந்தனர். அவர்களை அவமதிக்கும் வகையில் நீதி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.
நீதிமன்றத்தை அவமதித்துள்ள அவருக்கு நிச்சயம் ஜம்பர் அணிவிக்கப்படும். நீதிமன்றத்துக்கு எதிராகக் கதைத்ததால் எஸ்.பி.திஸாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்குச் சிறைச்சாலை உடை அணிவிக்கப்பட்டது. எனவே, உங்களுக்கும் நிச்சயம் சிறைச்சாலை உடையை அணிவிப்போம். என்றாவது ஒருநாள் அதனை செய்வோம் - என்றார்.
இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 'நான் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை மட்டுமே தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது. நான் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தால் முறையிடலாம். எதிரணிகள் போலியான பரப்புரையைக் கைவிடவேண்டும்' என்று கூறியுள்ளார். (அ-ம-44)

### செம்மணிப் (ஹர்ஷன)...

சுட்டிக்காட்டிய விடயங்களுக்குப் பதிலளிக்கையிலேயே, நீதியமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.
இது தொடர்பில் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்துள்ள விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், துரிதமாக விசாரணைகளும் இடம்பெறும். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டிய விடயத்தின் முக்கியத்துவத்தையும் உணர்கின்றேன். இதன்படி இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் விளக்கமளிப்பேன் - என்றார். (அ-ம-44)

### செம்மணிப் (கஜேந்திரகுமார்)...

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணியில் மிகப்பெரிய மனிதப் புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. எனினும், புதைகுழி உள்ள பகுதியில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே, இந்த விடயத்தில் கூடுதல் அவதானம் செலுத்துமாறு கோருகின்றேன். அகழ்வுப் பணிகள் இடம்பெறும் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.
அத்துடன், அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கும், சட்ட மருத்துவ அதிகாரியுடன் தொடர்புடைய விடயங்களைச் செயற்படுத்துவதற்கும் போதுமானளவு நிதி இல்லை எனக் கூறப்படுகின்றது. தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி 20 நாள்களுக்குக்கூட போதாதென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி இல்லாமல்போனால் அகழ்வுப் பணி நிறுத்தப்படக்கூடிய அச்சம் உள்ளது. எனவே, தேவையான நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்துக்குத் தேவையேற்பட்டால் வெளிநாடுகளில் இருந்து நிதியைப் பெற்றுத்தர எம்மால் முடியும். உண்மை கண்டறியப்படவேண்டும். சாட்சியங்கள் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-44-26)

### பயங்கரமாக...

அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்தில், கடந்த பெப்ரவரி மாதம் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. பணிகளின் ஐந்தாம் நாளான நேற்றையதினம் சிறிய என்புத்தொகுதியொன்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. முகத்தோற்றத்தின் அளவில் அது ஒரு வயதுக்கு உட்பட்ட சிசுவுடையதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. அத்துடன், இதுவரை 13 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் ஐந்து தொகுதிகள் முற்றாக மீட்கப்பட்டுள்ளதுடன், ஏனையவற்றை அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை ஆடைகள் எவையும் மீட்கப்படவில்லை. அத்துடன், வேறு சில என்புச் சிதிலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.
துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நீதவான் ஆ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஊடகக் கொள்கை சுதந்திரத்தை முடக்காது!

## *அமைச்சர் நளிந்த தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 5**

**தேசிய ஊடகக் கொள்கையைத் தயாரிப்பது தொடர்பில் ஊடகத்துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் கருத்து மற்றும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படுமே தவிர, முடக்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேசிய ஊடகக் கொள்கையொன்றைத் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் 2023ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டவையாகும். எமது அரசாங்கத்தின் ஆட்சியேற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதல்ல. இது தொடர்பில் கடந்த அரசாங்கத்தால் ஊடகத்துறைசார் நிபுணர்கள் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியையே நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம். ஊடகத்துறையினரின் பரிந்துரைகளுக்கு அமையவே இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். இது தேசிய ஊடகக் கொள்கை மாத்திரமே. மாறாக சட்டம் அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்- என்றார். (எ-இ)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம் 1,2 மாணவர்களின் மாதிரிச்சந்தை அண்மையில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது. (ச-41-159)



டிறிபேர்க் கல்லூரியின் 15 ஆவது முதல்வராக ஐ. தேவாஸ் வரன் நேற்றுப் புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் இதுவரை காலமும் தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,28)


கொமர்ஷல் வங்கி பெருமையுடன் ஆரம்பிக்கின்றது

Anagi

அணகி மகளிர் வங்கிச்சேவை மையம்

மகளிரை மேம்படுத்தும் நோக்கில் தனித்துவமான சேவைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது

ஆரம்ப விழா

2025 ஜூன் 6 | காலை 9.05 மணியளவில்

கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணக் கிளை (3 ஆவது மாடி)
இல. 474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்



Anagi
Women's Banking

COMMERCIAL BANK

விசாரணைகளுக்கு அழைக்கவும் 1316 | www.combank.lk
இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு நிறுவனம் | Fitch Rating AA-(lka)



## காணி விற்பனைக்கு

**நீர்வேலி - புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியில் (கார்பட் வீதி) அமைந்துள்ள 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (கடைத்தொகுதிகள், மண்டபங்கள் மற்றும் வீடுகள் அமைப்பதற்கு உகந்த வசதிகளுடன் கூடிய காணி )**

**077 707 9041, 077 612 7268**

## வேலையாட்கள் தேவை

**சைவ உணவகத்திற்கு அனைத்து வேலைக்கும் வேலையாட்கள் தேவை. (தங்குமிட வசதி உண்டு)**

தொடர்புக்க :
**076 423 6862**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன். வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு - **076 739 0413**
**077 623 4204**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.